# அடியார்க்கு நல்லார் உரைச் சிறப்பு

***முனைவர் ச. பொன் சாருமதி,*** *எம்.ஏ., எம்.ஃபில்., பி.எச்டி.,*
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த் துறை
காமராஜர் அரசு கலைக் கல்லூரி, சுரண்டை

**மலர்: 12**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: மார்ச்**

**வருடம்: 2025**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.14958657

*தமிழ்க் காப்பியங்களுள் சிறந்த உரைகள் பெற்ற நூல் நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம். சிலம்புக்கு கிடைத்த உரைகளுள் முதலில் எழுந்த உரை அரும்பதவுரை. அதனைப் பின்பற்றி எழுந்தது, இலக்கியக் கருவூலமாகத் திகழக்கூடியது அடியார் க்கு நல்லார் உரை. இவரது உரை புகார்க் காண்டத்தில் கானல்வரிதவிர ஏனைய பகுதிகளுக்கும் மதுரைக் காண்டத்தில் ஊர் சூழ்வரிவரையிலும் கிடைத்துள்ளன. பிற பகுதிகள் கிடைத்தில.*

## பெயர்ச் சிறப்பு

முத்தமிழ்க் காப்பியமான சிலம்பிற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லாரை "நிரம்பையர் காவலன்" என சிறப்புப் பாயிரச் செய்யுள் கூறுகிறது. அதனால் அடியார் க்கு நல்லார் நிரம்பை என்னும் ஊரைச் சார் ந்தவர் என்பதை அறிய முடிகிறது. இவரை ஆதரித்த வள்ளல் "பொப்பண்ண காங்கெயக் கோன்" எனவும் சிறப்புப் பாயிரம் குறிப்பிடுகிறது. இவரது காலம் பொ.ஆ 14-ஆம் நூற்றாண்டு.

**"ஒருந் தமிழொரு மூன்று முலகின் புறவகுத்துச்**
**சேரன் றெரித்த சிலப்பதி காரத்திற் சேர் ந்தபொருள்**
**ஆருந் தெரிய விரித்துரைத்தான் அடியார் க்குநல்லான்**
**காருந் தருவு மனையான் நிரம்பையர் காவலனே"**

***(சிலப். பாயிரம். பக். 8 )***

என்ற சிலம்பின் சிறப்புப் பாயிரம் இவரைப் பற்றி சிறப்பித்துக் கூறுகிறது.

## சமயம்

அடியார்க்கு நல்லார் என்பது சிவபெருமானின் பெயர். தேவாரத்தில்

**"கண்ணுளர் கருவுருளான்நிலை அண்ணலார் அடியார்க்கு நல்லாரே"**

என்று திருஞானசம்பந்தர் சிவபெருமானைக் குறிப்பிடுகிறார். அருணகிரிநாதர் முருகனைக் குறித்துப்பாடும்போது "அடியார்க்கு நல்லபெருமாள்" என்று கூறுகிறார். இவர் அடியார்க்கு நல்லார் என்ற சிவனின் பெயரைத் தாங்கியிருந்தாலும், பிறவா யாக்கை பெரியோன் என்பதையும், சிவன் என்பதையும் குறிக்க இறைவன் என்ற பொதுப் பெயரையே குறிப்பிடுகிறார். எனவே, இவர் சைவ சமயத்தைச் சார் ந்தவர் எனலாம். ஆனால், சமணக் கடவுளான அருகதேவனையும் சிறப்பித்துக் கூறுகிறார்.

### புகழ்மாலை

சிலம்பின் அருமை பெருமைகளை எடுத்துரைத்த இவரை பல அறிஞர்களும் பாராட்டி சிறப்பித்துள்ளனர். மேலைநாட்டு அறிஞர் கபில் சுவலபில் இவரைப் பாராட்டியுள்ளார்.

"அடியார்க்கு நல்லார் இல்லாவிடின் இசைத் தமிழ் குறித்தும் நாடகத் தமிழ் குறித்தும் கூறும் பழைய நூல்கள் இருந்தன என்பதை அறிய இயலாது" (பக்.48, கலைக் களஞ்சியம்) என்கிறார் செ.வேங்கடராமச் செட்டியார்.

"மேலை நாட்டுத் திறனாய்வாளரைப் போல அடியார்க்கு நல்லார் நுணுகி நோக்கி ஆராய்ந்து திறம்படக் கூறுகின்றார்" (பக்.249, உரையாசிரியர்கள்) எனச் சிறப்பிக்கிறார் மு.வை.அரவிந்தன்.

"ஓர் உரையாசிரியருக்குரிய அனைத்துத் திறனும் அடியார்க்கு நல்லாரிடம் பொருந்தியிருந்தமையே இத்தகு சிறந்த உரைநூலை படைத்தளிப்பதற்குக் காரணமென்பது அங்கை நெல்லியென் போதரும்" (பக். 212, அடியார்க்கு நல்லார்) என்கிறார் ச.வே.சுப்பிரமணியன்.

"அடியார்க்கு நல்லார் சிறந்த ரசிகர். நூலாசிரியரிடத்தும், நூற் பொருளிடத்தும், முத்தமிழினிடத்தும், தமிழ் மரபினிடத்தும் அளவற்ற பக்தியுடையவர்" என்று உண்மை யுரைக்கிறார் மு.அருணாசலம். ( பக். 565, தமிழ் இலக்கிய வரலாறு).

"சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்கு நல்லார் எழுதிய உரையால் பழங்காலத்து இசை நூல்கள், நாடக நூல்கள், கலைகளைப் பற்றி அறிய முடிகிறது" (பக். 194, தமிழ் இலக்கிய வரலாறு) என்கிறார் மு.வரதராசனார்.

"உரைத் தென்றல் அடியார்க்கு நல்லார்" எனப் போற்றுகிறார் இரா.மோகன். (பக்211, உரை மரபுகள்)

"அடியார் க்குநல்லார் இயலிசை நாடகம் என்னும் முத்தமிழ் பற்றிய கருத்தோட்டத்தை நன்குணர்ந்தவர்" (பக். 37, உரைகளும் உரையாசிரியர்களும்) என்பர் தி.சு.நடராசன்.

### பிறமொழிப் புலமை

முத்தமிழ்ப் புலமையும் நிறையப் பெற்ற அடியார்க்கு நல்லார் பிற மொழியையும் கற்ற புலமையாளர். இசை, நாடகம், சமயக் கருத்துக்கள் ஆகியவற்றை விளக்கும்போது வடமொழிக் கருத்துக்களையும் தவறாது தந்து தமது ஒப்புமையறிவை வெளிப்படுத்துகின்றார். வடமொழிச் சொற்களை மிகுதியாகப் பயன்படுத்துகின்றார்.

சான்றாக,

| | | |
|---|---|---|
| இறும்புது | - | அதிசயம் |
| உயிர் மருந்து | - | மிருத சஞ்சீவினி |
| நீரணிவிழா | - | அபிடேக விழா |
| கண்கூடு | - | பிரியதரிசனம் |
| பொற்குடம் | - | அபிடேககலசம் |

வடசொற்கள் தமிழில் வரும்போது, தமிழ் மொழியின் இயல்புக்கேற்ப மாற்றி அடியார்க்கு நல்லார் கூறுவதை "காவ்யம்" என்ற சொல்லை "காவியம்" என்கிறார்.

அடைக்கலக் காதையில் வரும் "வடமொழி வாசகம் செய்த நல்லேடு" (அடி.58) என்ற அடிக்கு அரும்பதவுரைக்காரர் "வடமொழி வாச கமாவது ஒரு கிரந்தம். அது, அபரீக்ஷ்ய நகர் த்தவ்யங் கர் த்தவ்யம் ஸூபரீக்ஷிதம், பஸ்சாத் பவதி ஸந்தாபம் ப்ராஹ்மணீ நகுலம் யதாசுசு என்கிறார். ஆனால், அடியார்க்கு நல்லார் அந்த பஞ்சதந்திர சுலோகத்தினை தெளிவாக விளக்கித் தம் புலமையைப் புலப்படுத்தியுள்ளார்.

### திசைச்சொற்கள்

தமிழ்நாட்டில் அடையும் புடையும் கிடந்த திசைநாட்டார் வழங்கும் சொல் திசைச்சொல் எனப்படும். பணித்தமொழி - பணித்தல், அருளிச் செய்தல், திசைச்சொல்

(சிலப். வேனிற். பக்.229) என்றும் "பனி கொண்டு பனியென்பதொரு நோயுண்டு: அது குடநாட்டு வழக்கு" (சிலப்.அந்தி. பக்.128) என்றும், தெக்கணம் - வடசொற்றிரிபு (சிலப். ஊர் . பக்.373 ) என்றும் "தெழித்தல் பிரித்தலுமாம்" - குடநாட்டார் வழக்கு (சிலப். அடைக். பக்.402 ) என்றும், "புதைத்தல்-போர் த்தல்-மலைநாட்டு வழக்கு (சிலப். இந்திர, பக்.152) என்றும் அவர் எடுத்துரைப்பன அவரது திசைச்சொல் அறிவைப் புலப்படுத்தும். இதன்வழி, அவரது திசைச்சொல் என்ற அவரது இலக்கணக்கோட்பாட்டு அறிவையும் வட்டார வழக்கு ஆய்வுணர் வையும் அறிய முடிகிறது.

**வழக்குச் சொற்கள்**

பேச்சு வழக்குச் சொற்களையும், நாட்டார் வழக்காற்றில் பயின்றுவரும் பழமொழிகளையும் கையாண்டுள்ளார் அடியார்க்கு நல்லார். "விளையாட்டுப் புசல் வினையாயிற்று எனும் வழக்குப்பற்றி (சிலப். வேனிற். பக்.230) என்று அவர் கூறுவது "விளையாட்டு வினையாயிற்று" என்று இன்றும் பேச்சு வழக்கில் பயின்று வருகிறது.

"மாதவியிடம் ஊடல் கொண்டு பிரிந்து வந்த கோவலன், கண்ணகியிடம் 'சுஇலம்பாடு நாணுத்தரும்" என்று கூறுவதற்கு "கெட்டால் மதிதோன்றும்" என்னும் வழக்கு" (சிலப். கனா. பக்.252) என்று கூறுகிறார். இதனை, இன்று "கெட்டால் தான் புத்தி வரும்" என்று பழமொழியாகக் கூறுவர். "நங்கையென்று புதல்வர் மனைவியரைக் கூறும் முறைப் பெயராதலின், நங்கையென்றாளென்க. "நாத்தூணங்கையொடு" என்ப போலும். இஃது அக்கால வழக்கு" (சிலப். கொலை. பக்.425) என்றும் கூறுகிறார். இவ்வாறு, அடியார்க்கு நல்லார் நூலாசிரியர் கால வழக்கினையும், தம் கால வழக்கினையும், நாட்டார் வழக்கினையும் எடுத்துரைப்பது அவரது மொழியியல் அறிவை வெளிப்படுத்தும் சான்றுகளாகும்.

**மறுத்துரைத்தல்**

அடியார்க்கு நல்லாரின் உரைக்கு முன் எழுந்த உரை அரும்பத உரையாகும். "அவர் பிறிது கூறுவாருமுளர்", "என்பாருமுளர்" என்றும் அரும்பதவுரைக்காரரை குறிப்பிடுகிறார். சில விடயங்களில் மறுத்துரைத்தலும் உண்டு. கோவலன், மாதவியைப் பிரிந்து கண்ணகி மனை நோக்கி வரும்போது குற்றிளையாள் கண்ணகிக்கு அறிவுறுத்தினாள் என்று கூறுகிறார் அரும்பதவுரையாசிரியர். அதற்கு, "அன்றித் தூரத்தே பார்த்துஐயுற்றுநம்காவலன்போலுமென்றுஅவன் அணுகினவிடத்து ஐயந்தீர்ந்து கோவலனென்றாள் எனினும் அமையும்"

(சிலப். கனாத். பக்.250) என்று மறுத்துரைக்கிறார். "இவ்வீணையை உருப்பசி கையில் வீணையென்பாருளர். அது பொருத்தமின்று (சிலப். கடலாடு.பக்.186) என்று மறுத்துரைக்கிறார். "வாரணம் - கோழியாவது உறையூர். முற்காலத்து ஒரு கோழி யானையைப் போர் தொலைத்தலான் அந்நிலத்தில் செய்த நகர்க்குக் கோழியென்பது பெயராயிற்று. அந்நகர் காண்கின்றபொழுது சிறையும் கழுத்துமாக ஆக்கியவதனாற் புறம்பே சிறையுடைய கோழியென்றாயிற்றென்பாருளர். அற்றன்று" (சிலப். நாடு. பக். 285) என்று பிறர் உரைகளை மறுக்கிறார்.

**வினாவிடை கூறல்**

நூலாசிரியர், கருத்தினை விளக்கும் பொருட்டு தருக்க முறையில் ஒரு வினாவைத் தாமே எழுப்பி அதற்கு விடை கூறும் முறையில் எழுதியுள்ளார். "உலகத்துக் காப்பியஞ் செய்வோன் அறனும் பொருளும் இன்பமும் வீடும் கூறல் வேண்டுமென்றே" என்று மாணாக்கன் வினா எழுப்புவது போன்று கூறி, அவர் அவ்வினாவிற்கு உரிய விடை பகர்கின்றார். "இந்நாடகக் காப்பியத்தினுள் அறனும் பொருளும் இன்பமும் கூறிச் சிறிதாயினும் வீடு கூறிற்றலர் என்னை எனின் "யானறிகுவனது பட்டதென்று"(பதி.11) என உரைத்த சாத்தனார், நாற்பொருளும் பயப்பப் பெருங்காப்பியமாகச் செய்யக் கருதியிருக்கின்றார்க்கு அடிகள் "நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள் (பதி.66)" (சிலப். உரை. பக். 10-11) என்று தொடங்கி விரிவாக விளக்குகின்றார்.

**இலக்கணப் புலமை**

பாடலுக்கு உரை எழுதும் போது சொற்களின் இலக்கண வரையறை இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றது. தொல்காப்பியத்தை இக்காப்பியத்திற்கு இயற்றமிழ் இலக்கணமாகக் கொண்டமையால் தொல்காப்பிய நூற்பாக்களை மேற்கோள் காட்டி உரை வகுத்துள்ளார். அவர் ஆங்காங்கே பெயர், வினை, இடை, உரிச் சொற்களின் தன்மைகள், திணை பால் குறிப்புகள், வேற்றுமைத் தொகை, வினைத்தொகை, உருபு மயக்கங்கள், மரூஉ, மெய்ப்பாடு போன்ற பல்வேறு இலக்கணக் கோட்பாடுகளைக் கூறுபாடுகளாகக் குறித்துச் சொல்கிறார்.

"குணவாயில் - திருக்குணவாயில் என்பதோரூர். அது வஞ்சியின் கீழ்த்திசைக்கண் உள்ளது. அஃது

ஆகுபெயர்" (சிலப். பதிகம். பக்.12) என்று கூறுகிறார்."குன்றக்குரவர்-ஏழனுருபுத்தொகை", "பொலம்பு - உவமைத்தொகை" "(சிலப். பதிகம். பக்.19) எனக் கூறுவதன் வழி அவர் தம் இலக்கணப் புலமையின் ஆழம் இனிது புலனாகும்.

**அணிநலன்கள்**

சிலம்பில் அணிகளுக்கு நிரம்ப இடமுண்டு. அணிகள் வருமிடங்களைத் தவறாது விளக்கிச் செல்கிறார் அடியார்க்கு நல்லார். உதாரம் என்னும் அலங்காரத்தைப் பற்றிக் கூறுமிடத்து,

**"உதார மென்ப தோதிய செய்யுளிற்**
**குறிப்பி னொருபொரு ணெறிபடத் தோன்ற"**
**(தண்டி. 21)**

என்ற தண்டியலங்கார நூற்பாவினைச் சுட்டுகிறார். கோவலனும் கண்ணகியும் ஞாயிறும் திங்களும் ஒருங்கே இருந்த தோற்றம் போல இருந்தமையினை இளங்கோவடிகள் மனையறம்படுத்த காதையில் கூறுவார். இதற்கு அடியார்க்குநல்லார், "ஒருங்கிருத்தல் - இல்பொருளுவமும்" (சிலப். மனை .பக்.49) என்று கூறுகிறார் .

**பாடவேறுபாடு கூறுல்**

அடியார்க்கு நல்லார் பொருந்தாத பாடல்களை மறுத்து சரியானவற்றைச் சுட்டிக் கூறுகிறார். மங்கல வாழ்த்துப் பாடலில், மாசாத்துவானை இளங்கோவடிகள் கூறுமிடத்து "வருநிதி பிறர்க்கார்த்து மாசாத்துவான்" என்பார். இதற்கு அடியார்க்கு நல்லார் "பலர்க்கு என்பது பாடம். அதற்கு இல்லாராகிய பலர்க்கென்க" (சிலப். மங்கல். பக். 39) என்று கூறுவார் .

"அரையிருள் யாமத்தும் பகலும் துஞ்சார்" என்னும் அடியில் வரும் "துஞ்சார்" என்பதற்கு "துஞ்சான்" என்று பாடம் கூறி. காமன் துஞ்சனாய்த் திரிதருதலின். நகரம் காவல் சிறந்ததெனினும் அமையும்" (சிலப். அந்தி. பக்.135) எனப் பாடம் கூறி விளக்குகிறார். "முட்டினும் முட்டும்" என்பதற்கு "முட்டினும் முட்டுவர்" என்று பாடம் உண்டு என்கிறார். "முட்டினும் முட்டுவர் என்றது பாடமாயின் கழிவோர் செய்யினுஞ் செய்வாரென்க" (சிலப். நாடு. பக். 272) என்று வேறு பாடமும், விளக்கமும் கூறிச் சிறப்பிக்கின்றார் .

**பன்னூற் பயிற்சி**

சங்க இலக்கியங்கள் முதல் சிற்றிலக்கியங்கள் வரையிலான பல நூல்களைக் கற்றறிந்தவர் அடியார்க்கு நல்லார். இவர், தாம் மேற்கோள் கூறும் நூல்களின் பெயரினையும் குறிப்பிடுகிறார். பொருளாராய்ச்சி செய்யும் போதும் அவர் இணையான இலக்கியச் சான்றுகளைக் கூறி விளக்கியுள்ளார்.

சிலம்பில் வரும் சொற்களுக்கு ஒத்த சொற்கள் பிற இலக்கியங்களில் வருமாயின் அடியார் க்கு நல்லார் அவற்றைத் தவறாது சுட்டிச் செல்கின்றார். "தாலப்புல்லென்றார்" (சிலப். கொலை. பக். 427) என்ற வரிகளை "புறக்கா ழனவே புல்லென் மொழிப" (தொல். மரபு. 85) என்ற தொல்காப்பிய நூற்பாவோடு ஒப்பிட்டுக் கூறியுள்ளார். எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, சிலம்பு, மணிமேகலை, பெருங்கதை, சூளாமணி, வளையாபதி, முத்தொள்ளாயிரம், கலிங்கத்துப்பரணி, நாலடியார், நான்மணிக்கடிகை போன்ற பல நூல்களிலிருந்தும் சீவகசிந்தாமணியிலிருந்தும் மிகுதியான மேற்கோளைக் கையாள்கிறார். தகுந்த மேற்கோள்களை பொருத்தமான இடமறிந்து பயன்படுத்துவதைக் கொண்டு அடியார்க்கு நல்லாரின் பன்னூற்புலமைச் செறிவு நன்கு வெளிப்படுகிறது.

**பல்கலைப் புலமை**

இளங்கோவடிகள் முத்தமிழ் கற்றுத் துறைபோகிய வித்தகர் எனில், அவர் நூலுக்கு உரை இயற்றிய அடியார்க்கு நல்லார் அவரது புலமைப் பரப்பைக் கண்டு வியந்தவர் எனலாம். முத்தமிழ் குறித்த புலமை மட்டுமில்லாமல் ஆடைகள் குறித்தும், கணக்கியல் பற்றியும், ஓவியம், மருத்துவம், வானியல், வயிரங்கள், கூலங்கள் போன்ற பல கலைகளிலும் ஆழமான அறிவுடையவர்.

அரங்கேற்று காதை உரை - இசை, நாடகப் புலமை

இந்திரவிழவுரெடுத்த காதை உரை - ஆடை, அணி, மணி

கடலாடு காதை உரை - ஒப்பனை

வேனில்காதை உரை - ஆடற் கலை

ஊர்க்காண் காதை உரை - நவமணிகள்

*ஆய்ச்சியர் குரவை உரை - குரவைக் கூத்து*

*அடியார்க்குநல்லாரின் இசைச்சிறப்பு குறித்து "இசைத்தமிழ்" என்ற பெயரில் ஒரு நூலே எழுதியுள்ளார் வெள்ளைவாரணர். "இசைத்தமிழ் நூலாகிய பெருநாரை பெருங்குருகும் பிறவும் தேவவிருடி நாரதன் செய்த பஞ்சபாரதீயம் முதலாகவுள்ள தொன்னூல்கள் இறந்தன. நாடகத் தமிழ் நூலாகிய பரதம், அகத்தியம் முதலாகவுள்ள தொன்னூல்களும் இறந்தன. பின்னம் முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம் என்பவற்றுள்ளும் ஒருசார் சூத்திரங்கள் நடக்கின்ற அத்துணையல்லது முதல் நடு இறுதி காணாமையின் அவையும் இறந்தன போலும்சுசு என்கிறது அவரது உரை.*

### திறனாய்வு

*மேனாட்டுத் திறனாய்வாளர் களைப் போல காப்பிய அமைப்பு, கதை கட்டுக்கோப்பு, நிகழ்ச்சி ஒருமைப்பாடு, காப்பிய மாந்தரின் பண்புகள், நூலாசிரியரின் புலமைச்செறிவு, செயல் நிகழும் கால எல்லை, இடம் போன்ற செய்திகளை எல்லாம் தம் நுண்மான் நுழை புலத்தினால் நுணுகி ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளார்.*

**"தென்றிசை மருங்கினோர் செழும்பதிதன்னுள்**
**இந்திர விழவுகொண் டெடுக்குநாள் இதுவென"**

***(சிலப். கடலாடு. 5-6)***

*என்ற அடிகளுக்கு "சித்திரையாகலின் ஈண்டுத் திங்களும் திதியும் கூறியது என்னையெனின் கோவலனும் மனைவியும் ஊரினின்றும் போந்த திங்களும், திதியும், வாரமும், நாளும் வழிச் செலவும் ஒழிவும் மதுரையிற் சென்று புக்கு இவன் இறந்துபட்ட திங்கள் முதலாயுள்ளவற்றோடு மாறு கொள்ளாது முடிதற்கெனக் கொள்க" (சிலப். கடலாடு. பக்.185) என காலவுணர் வுடன் விளக்கம் தருகிறார் .*

### தமிழ்ப்பற்று

*வடமொழி அறிந்தவராக இருந்தாலும் அடியார்க்கு நல்லார் தமிழ்ப்பற்றும் உடையவர். "தீபகம்" என்ற அணி இலக்கணப் பெயரைத் தமிழாக்கி "விளக்கு" எனக்கூறி தம் தமிழ்ப்பற்றை புலப்படுத்தியுள்ளார் .*

### பலபொருள் கூறல்

*அடியார்க்கு நல்லார் சில வரிகளுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பொருட்களைத் தருகிறார். சிலேடையாக அமைந்தவற்றை தெளிவுபடுத்து கின்றார். ஊர் காண் காதையில்,*

***"நுதல்விழி நாட்டத்து இறையோன்"***

***(சிலம்பு. 7)***

*என்ற அடிக்கு மூன்று பொருள் உரைக்கின்றார்.*

1. *இறைவி கண் புதைத்தபொழுது நெற்றியில் புறப்படவிட்ட கண்ணையுடைய இறைவன்*
2. *நுதலின் இமையா நாட்டம்*
3. *காமனை விழித்த நாட்டம்*

*என்று விரிவாக விளக்குகிறார் .*

### உரைநடைச் சிறப்பு

*பல இடங்களில் ஓசைஇன்பம் பயக்கும் சிறந்த கவிதை போல எழுதியுள்ளார். பதிகத்தின் உரையில் இளங்கோவடிகள் துறவு புண்ட வரலாற்றைக் கவிதைச் சுவை சொட்டச் சொட்ட எழுதுகின்றார் . சான்றாக,*

***"ஒழுக்கம் உடைய விழுக்குடிப் பிறந்தோர் ,***
***நாணுடை மகளிரொடு நீணெறிச் செல்வார்"***

***(சிலப். பதிகம். பக். 17)***

*என்று அகவற்பா அமைப்பிலே உரை எழுதியுள்ளார்.*

### முடிவுரை

*இவ்வாறு முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்கு நல்லார் அரியதோர் உரையினைப் படைத்தளித்து இலக்கிய நெஞ்சங்களை இனிதே மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துகிறார். இவரில்லையேல் அழிந்துபட்ட பல தமிழ் நூல்களின் பெயர் கூட தெரியாமல் மறைந்திருக்கும் என்பது திண்ணம்.*